# தமிழீழ மீட்பு நிதி கடன் முதற்கட்ட மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளால் தமிழீழ மீட்பு நிதிக்கு மக்களிடம் இருந்துபெறப்பட்ட இரண்டுபவுண் கடன் முதற்கட்டமாக நாளை நூறு பேருக்கு மீளளிக்கப்படவுள்ளது. இது தொடர்பாக விடுதலைப் புலிகள் நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தி விடுத்த அறிக்கையின் விபரம் வருமாறு

எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி எமது மக்களின் விடிவிற்கும் மண்ணின் விடுதலைக்குமாக தமிழீழ மீட்பு நிதிக்கு மனமுவந்து பங்களித்தவர்களில் நூறு கடன் பத்திரதாரர்களுக்கான கடனை முதற் கட்டமாக மீளளிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

தமிழீழ மண்ணின் விடுதலைக்காக தங்கள் இன்னுயிரை ஈந்த புனிதர்களின் நினைவு தினமான ''மாவீரர் நாள்'' 27·11·1990 அன்று மேற்படி மீளளிப்பு நடைபெறும்.

கடன் மீளளிப்பிற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் பத்திரதாரர் ஒவ்வொருவரும் தமது கடன் பத்திரத்தையும் அடையாள ஆவணம் ஏதாவதொன்றையும் எம்மால் அனுப்பப்பட்ட 27 11·1990 திகதிய கடிதத்தையும் மீளளிப்பு நடைபெறும் இடத்தில் அன்றைய தினம் எம்மிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடன் மீளளிப்பிற்காகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் 4 ஆம் பக்கத்தில்.

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 01 கார்த்திகை (26 - 11 - 1990) திங்கட்கிழமை ஓசை 27

## பாதுகாப்பு வலயத்திற்கு குழாய் மின் விளக்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு வலயத்தை இரவு வேளையில் வெளிச்சக் குறியீடுகள் மூலம் பிரகாசமாக எடுத்துக்காட்ட வசதியாக வடபகுதி மின்சாரசபை குழாய் மின் விளக்குகளைப் பொருத்த உள்ளது. இந்த குழாய் விளக்குகள் புள்ளடி வடிவில் நாற்பத்தைந்து பாகையில் வானை நோக்கியவாறு வைத்தியசாலை வலயத்தைக் குறிக்கும் ஒவ் (4 ஆம் பக்கம் பார்க்க)

### பாரிய மணிகள் ஓசை எழுப்பியதும்

# இன்று நள்ளிரவு 12-03க்கு

# மாவீரர் சுடர் ஏற்றப்படும்

(நமது நிருபர்)

தமிழீழ மண்ணின் விடிவிற்காகப் போராடி வீரமரணமடைந்த மாவீரர்களை நினைவு கொள்ளும் முகமாக இன்று நள்ளிரவு மணி 12.01 க்கு தமிழீழமெங்கும் பாரியமணிகள் ஒலிக்கப்படும். இந்தநேரத்தில் மாவீரர்களுக்கு இரண்டுநிமிட அஞ்சலி செலுத்தப்பட்டு அதைத் தொடர்ந்து மணி 12.03 க்கு மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

இரண்டாவது மாவீரர் வாரத்தின் இறுதி நாளான செவ்வாய்க்கிழமை அதிகாலை 12-01 மணி தொடக்கம் அதாவது இன்று நள்ளிரவு (12-01 மணி) மாவீரர் இறுதிநாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. இந்த இறுதிநாள் நிகழ்ச்சிகள் ஆலயங்கள், நிறுவனங்கள், பாடசாலைகள் என்பனவற்றில் உள்ள பாரிய மணி ஒலிகளுடன் ஆரம்பமாகின்றன.

இந்தமணிஒலியைத்தொடர்ந்து மாவீரர்களுக்கு மக்களின் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெறும். இந்த அஞ்சலி இரண்டு நிமிடங்கள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்துவதாக அமையும். இதைத்தொடர்ந்து வீடுகளிலும் பொது இடங்களிலும் மாவீரர் சுடர் 12-03 மணிக்கு ஏற்றப்படவுள்ளது.

இந்த வைபவத்தின் போது தமிழீழமக்கள் அனைவரையும் தங்கள் இல்லங்களையும், வீதிகளையும் குத்துவிளக்குகளா (4ஆம் பக்கம் பார்க்க)

## ''வேங்கைகளின் விடுதலை வேதங்கள்''

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினரால் மாவீரர் நினைவாக வெளியிடப்பட்ட புதிய பாடல் ஒலிப் பதிவு நாடாவான ''வேங்கைகளின் விடுதலைவேதங்கள்'' தற்போது விற்பனையாகின்றது.

இந்த நாடாப் பதிவுகளை விடுதலைப் புலிகள் கலை கலாசாரச் செயலகம், மக்கள் முன்னணிப் பிரிவுச் செயலகங் (4 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுப் பொத்தவில் ஆறு இராணுவத்தினர் பலி

(அனுராதபுரம்)

அனுராதபுரத்திற்கு வடமேற்குப் பகுதியில் உள்ள கட்டுப்பொத்தை என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகி ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

## தப்பி ஓடிய இராணுவத்தினர் புலிகளால் சுற்றிவளைப்பு

(மாங்குளம்)

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட வேளையில் காடுகளுக்குள் தப்பி ஓடிய சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு விடுதலைப் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டு தாக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை மாங்குளம் இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை தொடுத்த தாக்குதலைத் தொடர்ந்து முகாமை கைவிட்டு வெளியேறிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நான்காம் நாளாகத் தொடர்ந்து சண்டை நடந்து வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இவ்வறிக்கையில் இராணுவத் (4ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோணமலை மோதலில் 8 இராணுவம்பலி; மூவர் காயம்

(கொழும்பு)

திருமலை மாவட்டத்தில் கோமரங்கடவெலப் பகுதியில் குமரேசன் கடவை என்னுமிடத்தில் ரோந்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதலில் 8 இரா (4ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளத்தில் தொடர்ந்தும் விமானங்கள் குண்டுவீச்சு

(மாங்குளம்)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் மாங்குளம் இராணுவத்தளம் வீழ்ந்ததைத் தொடர்ந்து தொடர்ச்சியான விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்கள் நடைபெற்றவண்ணம் உள்ளன.

நேற்று அதிகாலையிலிருந்து மாலை இரண்டு மணிவரை தொடர்ச்சியான குண்டுவீச்சு இடம்பெற்றவண்ணம் உள்ளதாக அங்கிருந்துநேற்றுமாலை எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன,

மாச்செற்றிரக குண்டுவீச்சு விமானங்களும், வை-12 ரக சரக்கு விமானமும் இடைவிடாது குண்டுகளை வீசிவரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் விபரம் கோரப்படுகின்றது

(கொழும்பு)

கடந்த ஏழு ஆண்டுகளில் காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களை இலங்கை சட்ட அறிஞர் சங்கத்தின் மனித உரிமைகள் குழு கோரியுள்ளது.

1983ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து காணாமல் போனவர்களின் உறவினர்கள் தங்களிடம் உள்ள விபரங்களைச் சத்தியக் கடதாசி மூலம் அனுப்பி வைக்கலாம் என அந்தச் சங்கம் கூறியிருக்கிறது.

## மன்னாரில் மாவீரர் நாள் சிறப்பாக நடத்த ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மாவீரர் தின இறுதி நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெறவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சுரேஷ்ம், பூநகரி பிரதேசப் பொறுப்பாளர் ஷாமும் மேற்கொண்டு வருகிறார்கள்.

போராளிகளின் வீரம்செறிந்த வாழ்க்கை, வீரமரண இறுதி அஞ்சலி ஆகியன அடங்கிய வீடியோப் படக்காட்சிகளும் இடம்பெறவுள்ளன. வீரமரணம் எய்திய மன்னார் மாவட்டவேங்கைகளின் ஞாப (4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் அகதிகளுக்கு 20,000 வீடுகள் அமைப்பு

(திருச்சி)

தமிழ்நாட்டில் 320 அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு 20,000 வீடுகள் கட்டப்பட்டு வருவதாக மாநில மறுவாழ்வுத்துறை அமைச்சர் சி. என். ராம்தாஸ் தெரிவித்தார்.

புதுக்கோட்டையில் நேற்று (4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**நியூ வீனஸ்**
**NEW VENUS**

எமது அன்பான வாடிக்கை யாளர்களுக்கு ஒரு வேண்டு கோள்! எமது ஸ்தாபனம் மீண்டும் 60,ஸ்ரான்லி வீதியில் நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக் களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலக்ரோனிக் கடிகாரங் களும், பற்றறிகளும் விற்ப னைக்குண்டு. கிளை ஸ்தா பனம்: 153A, பலாலி வீதியி லும் நடைபெறுகின்றது.

(B/1586)

**ஜோதிட சேவை**

ஜோதிட சாஸ்திரத்தில் அனுபவமிக்க முதிர்ந்த ஜோதி டர், ஆயர்பாடி ஸ்ரீ வே த. மயில்வாகனம் அவர்களை, யாழ்ப்பாணம் நாச்சிமார்கோ விலடி சேசாவின் பிள்ளையார் கோவில் வீதி, 52 ஆம் இலக் கத்தில் சந்திக்கலாம்.

(R/866)

## ரோந்து வாகனம் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில்நேற்று முன்தினம் ரோந்து சென்ற இராணுவ வாகனம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகளால் கைக்குண்டுத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. இத்தாக்கு தலில்படையினருக்கு ஏற்பட்ட சேதம் பற்றிய விபரம் தெரி யவில்லை. (க)

# மாவீரர்தினச் செய்திகள்

(குருநகர்)

கொக்குவில் மத்தி சிற்றா ரலை தமிழீழ மாவீரர் நாள் அன்று மாவீரர் பெயர்களை வீதிகளுக்கு சூட்டி வைத்துள் ளது.

1. லெப். கேணல்: பாண்டி யன் ஸ்ரீகரன் செல்லத்துரை வீதி, (பிரம்படி ஒழுங்கை கொக்குவில் கிழக்கு)
2. லெப் கேணல்: இம்ரான் சதானந்தன் சங்கரப்பிள்ளை வீதி. (பழைய தபாற்கந் தோர் ஒழுங்கை கொக்கு வில்)
3. கப்டன்: ரவிராஜ் கிரி தரன் சொக்கநாதர்லிங்கம் வீதி, (அச்சுக்கூட ஒழுங்கை கொக் குவில் கிழக்கு)
4. வீரவேங்கை புறூஸ்லி சந்திரகுமார் குமாரசாமி வீதி, (குளக்கரை ஒழுங்கை கோவில் வீதி கொக்குவில் கிழக்கு)
5. (வசந்தன்) வசந்தகுமார் சிவகுருநாதன் வீதி, (மின் ஒழுங்கை ஆடியபாதம் வீதி கொக்குவில் கிழக்கு)

★

(அராலி)

மேஜர் பிரசாத் முரளிதரன் அராலி மேற்கைச் சேர்ந்த கப்டன் நிக்ஸன் எனப்படும் முருகதாஸ், சேரன் எனப் படும் சர்வானந்தா, சித் தப்பா எனப்படும் கணேச தாஸ் ஆகியோரது ஞாப கார்த்தமாக அராலி மேற்கில் வீதிகளுக்கு பெயர் சூட்டப் பட்டது.

(உடுவில்)

உடுவில் உதயசூரியன் சன சமூக நிலையத்தினரால் அப் பகுதியில் அன்பு வீதி என வீரவேங்கை வெற்றிவேல் அன்பு (மு. தனபாலசிங்கம் வெற்றிலைக்கேணி. அவர் களின் பெயர் சூட்டப்பட்டு அவரது சகோதரராகிய மு. சபாரத்தினம் அவர்களால் 23-11.90 மாலை 5 மணியள வில் திறந்து வைக்கப்பட் டது.

★

(மல்லாகம்)

கீரிமலைவீதியுள்ள கரம்பைக் கடவை வீதி மாவீரர் தினத் தையொட்டி கப்டன் பல்லவன் வீதி எனப் பெயர் சூட்டப் பட்டது. இதனை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ் மாவட்ட செயலக முக்கியஸ்தர் பலரும் கலந்து கொண்டனர்

★

(கிளிநொச்சி)

மாவீரர் தினத்தை முன் னிட்டு கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் மரம் நடுகை இயக் கம் ஆரம்பித்து வைக்கப்பட் டது.

விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்டப் பொறுப் பாளர் சீலன் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் கோபி ஆகியோர் மரம் நடுகை இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.

விடுதலைப் புலிகளின் தமி ழீழ ஆய்வு நிறுவனம் (றாட்) கிளிநொச்சி மாவட்ட மக்க ளுக்கு 3 வருடங்களில் பயன் தரும் சுமார் 7 ஆயிரம் நல் லின தென்னங் கன்றுகளை யும், பல ஆயிரக்கணக்கான பனம் விதைகளையும் வழங் கியது.

★

(பூநகரி)

பூநகரிகோட்டைமுகாம்தகர்ப் பின்போதவீரமரணமடைந்த ஏழுவீரர்களின் பெயர்கள்வீதி களுக்கு சூட்டப்படவுள்ளன. பூநகரி ஞானிமடம் வீதி லெப். குமார் வீதி எனவும், பள்ளிக் குடா வீதி கப்டன் தனபால் வீதி, எனவும், 4ஆம் கட்டை முதலாம் ஒழுங்கை வீதி விசு வீதி எனவும், மூன்றாம் ஒழுங் கைக்கு கஸ்ரோ வீதி எனவும் பல்லாய் வீதிக்கு அன்னக்கிளி வீதி எனவும் பெயர் சூட்டப் படவுள்ளன.

★

(ஊர்காவற்றுறை)

மாவீரர் நினைவாக வேலணை ப. நோ. கூ. சங்க ஊழியர்களும் சுமார் இரு நூற்றுக்குமதிகமான ஆண் பெண் தொண்டர்களும் வேலணை அராலித்துறை வீதியை சிரமதானமுறையில் திருத்தியமைத்தனர். வானத் தாக்குதலுக்குஇடமேற்படாத விதத்தில் மாலை ஆறுமணி முதல் இரவு முழுவதும் இந்த சிரமதானப்பணி இடம் பெற் றது. வேலணை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. பொ. நடராசா பொதுமுகா மையாளர் திரு. எஸ். செல் வத்துரை கூட்டுறவாளர் திரு. மாசிலாமணி ஆகியோர் கலந்து கொண்டுசிரமதானப் பணியைஉற்சாகப்படுத்தினர்.

★

## நாடகம்

(அராலி)

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியில் மாவீரர் தினத்தையொட்டி இன்று திங்கட்கிழமை இன விடுத லையை மையமாகக்கொண்ட "சத்திய சோதனை" என்ற நாடகம் மேடையேறவுள்ளது மாவீரர் தினத்தையொட்டி அன்றைய தினம் பொதுக் கூட்டமொன்றுக்கும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.


## மாவீரர்

## தமிழ் படைப்போம்!

மண்மீட்புப் போரதனில்
மன்னுபுகழ் உயிரீந்த
மாவீரர்கள் வாரமதும்
மக்களது மனதெல்லாம்
மகிமையினைப் பெறுவதாக!

சிங்களவர் முஸ்லிம்கள்
சித்திரவதைக் குள்ளாகும்
வடகிழக்கு மாந்தர்களை
வட்டத்துள் ஒன்றிணைத்து
வரித்திடுவோம் தமிழீழம்!

கொன்றொழிப்பார் தமிழர்களை
கொண்டிருப்போர் தமிழருடமை
என்றைக்கும் எமது மண்ணில்
நின்றிருக்கும் கொடியபோரை
வென்றிங்கு தமிழ்படைப்போம்!

மாவீரர்கள் நாமமிந்த
மண்ணிருக்கும் வரையிலங்கும்
தேமதுரத் தமிழோசை
திசையெங்கும் புகழ்பரப்பும்
தமிழீழ மண்ணெங்கும்
புலிக்கொடிகள் அணிசெய்யும்!

சிகை அலங்கரிப்பாளர் சங்கம்
வடஈழம்

(B. 1624)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## மாவீரர் விழா

இடம்: கைலாசபதி கலையரங்கு
பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
காலம்: 26–11–1990 திங்கட்கிழமை
பிற்பகல் 2-00 மணி

தனியார் கல்வி நிறுவன இயக்குநர்கள், அதி பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும தவறாது சமுகமளிக்கும்படி வேண்டு கின்றோம்.

செயலர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

(B. 1621)


## மறக்குமா உள்ளம் ?

மாவீரா உன்னை
    மறக்குமா உள்ளம் ?
தூபியாய் நின்று
    தமிழீழ வீதியெங்கும்
காவியமாய் ஆகிவிட்ட
    காட்சியினைக் கண்டு
கூவியழும் வேளையதில்
    கொள்கைக்காய் நீ மரித்தாய் ..
        (மாவீரா உன்னை)

பாசத் தமிழினம்
    பரிதவிக்கும் போது
நேசத் தோடிங்கே
    நீட்டியவுன் துப்பாக்கி
தேசத்தைக் காக்க
    அணிவோடு நேர்வழியில் ....
வீசும் புயலாக மாறி ...
    முழங்கியதை யார்மறப்பர் ?

- மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## எங்கள் பரிதிக்கு அகவை முப்பத்தேழு

எங்கள் வானத்திருள் அகற்ற
எழுந்து வந்த சூரியனிற்கு
திங்கள் கார்த்திகை அதுதன்னில்
அகவை முப்பத்தேழு எழுந்ததின்று

இந்தக் கடலை அணைத்திடவே
இந்துக் கடலை கடந்தவர்கள்
களத்தே ஆடிக் களைத்தனரே
இங்கிருப்போர் முறை இப்போ
இவர்கள் தோற்பது முடிவன்றோ

சங்குல் விலகும் இவன் உதிப்பால் - நற்
காற்றும் வீசும் இவன் விழிப்பால்
இங்குள் சிறுமை இனி அகலும்
இரவும் பகலாய் ஒளி வீசும்

எங்கள் பரிதி ஒளிர்வதற்கு
எவரும் தடையாய் இருக்காது
என்றும் அழியா நிலை நிற்க
நன்றே வாழ்த்தி நாம் நிற்போம்

ரவி


## அனித்தா பயிற்சி நிலையம்

K. K. S. றோட், பூநாறிமரத்தடி. கொக்குவில்.

ஆடைகள் தயாரிப்பு, சிகையலங்காரம்,
உணவு தயாரிப்பு

'டிப்ளோமா-ஹோம் எகனமிக்ஸ்'

- ஆடை தயாரிப்பு
- பற்றிக் துணி வர்ண சாயமிடல்
- சிகையலங்காரம்
- விதவிதமான கேக் தயாரிப்பு
- உணவு தயாரிப்பு
- கை வேலைகள்
- பூ வேலைப்பாடுகள்

ஆகியவற்றுடன்

திருமணப் பெண்களின் மேக் - அப் வகுப்புகள் மாதந்தோறும் 2 நாட்கள் நடைபெறும். விபரங்க ளுக்கு மேற்கூறிய விலாசத்தில் தொடர்புகொள்க.

திருமதி பவளம் சுப்பிரமணியம்

(B 1625)


## மரண அறிவித்தல்

### கந்தவனம் அம்மிணிப்பிள்ளை

(ஈஸ்வரியம்மா)

திருக்கோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் காலஞ்சென்ற கந்தவனம் அவர்களின் அன்பு மனைவியும், இராசம்மாவின் (திருமலை) அன்புத் தங்கையும், பரமேஸ்வரி, மகேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், ஜெயராஜா, மைக்கல், காலஞ்சென்ற பிரான்ஸிஸ் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயரஞ்சன், ஜெயகாந் தன், ஜெயமோகன், ஜெயகரன், மரியதாஸ், ஜெயதீபன், யேசுதாசன், ரிஷாந்; சயனொளிபவன் ஆகியோரின் ஆசைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (25-11-90) திருநெல்வேலி கொலனி மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெனடி லேன்,
இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

தகவல்; ஜெ. மோகன்

(R. 870)

## சிந்தனைக்கு

ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக
உபதேசம் செய்யாதே சொல்வதற்கு
ஏதாவது இருக்கும்போது மட்டுமே
உபதேசம் செய்.

— ரிச்சர்வேட்லி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம் 26-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்:025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# அரச பயங்கரவாதமே காரணம்

''மிகவும் அரிதாகவுள்ள ஆதாரங்கள் 'பயங்கரவாத நடவடிக்கைகளினால்' வீணடிக்கப்படுகின்றது'' என சிறிலங்காவின் பிரதமமந்திரியும், நிதி மந்திரியுமான டி. பி விஜயதுங்கா மாலைதீவில் ஐந்தாவது 'சார்க்' மாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் மூலவளங்களும், ஏனைய பொருளாதார ஆதாரங்களும் குறைவாகவும், அதேவேளை கண்டுபிடிக்கப்படாமலும் இருப்பதும் உண்மையே. இதன் காரணமாக இந்த நாடுகளின் பொருளாதார விருத்திக்கு வளப்பற்றாக்குறையும் இந்த நாடுகளில் நிலவி வருகின்றன.

அதேவேளை, காலனி ஆதிக்கத்தின் காரணமாகவும், மூலவள மூலதனப் பற்றாக்குறை காரணமாகவும் இந்த நாடுகளில் கைத்தொழில்கள் விருத்தியடையவில்லை. நாட்டின் பொருளாதாரங்களும் செழிக்கவில்லை. இதனால் இந்த நாடுகள் தொடர்ந்தும் விவசாயப் பொருளாதாரத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது இந்த விவசாயப் பொருள்களின் ஏற்றுமதியைக் கொண்டே இந்த நாடுகளின் பொருளாதாரங்கள் இயங்குகின்றன. ஆனால் இந்த விவசாயப் பொருள்களுக்கு உலக சந்தையில் உள்ள பாதகமான நிலைமைகள் இந்த நாடுகளின் பொருளாதாரத்தைப் பெரியளவில் சிதைத்து வருகின்றன.

இந்த நிலையில், வருடா வருடம் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பிரதம மந்திரியும், நிதி அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா தமது நாட்டின் பற்றாக்குறையையும், நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியையும், உதவி வழங்கும் நாடுகள் விடும் எச்சரிக்கையையும் கருத்திற்கொண்டு நோக்கும்போது நாட்டில் அரிதாகவுள்ள மூலவளங்கள் வீண் விரயம் ஆக்கப்படுவதாகத் தோன்றுவது அர்த்தமுள்ளதுதான்.

ஆனால், நாட்டின் அரிதான மூலவளங்கள் 'பயங்கரவாத நடவடிக்கையினால், வீணடிக்கப்படுகின்றன என அமைச்சர் டி. பி. விஜயதுங்கா கொடுத்திருக்கும் விளக்கம்தான் தப்பானதாகும். அதாவது நாட்டின் மூலவளங்கள் வீண்விரயமாவதற்கு நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத அரசாங்கத்தின் அதிகார துஷ்பிரயோகமும், அரசியல்வாதிகளின் அதிகார ஆசையும், அரசபயங்கரவாத நடவடிக்கைகளுமே காரணமாகும்.

இலங்கையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையானது வளர்ச்சியடைந்தமையால் அது ஓரளவு இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதித்தது உண்மையே. ஆயினும், இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழிப்பிற்கு உள்ளாக்கியது அரச பயங்கரவாதிகளின் நடவடிக்கையும், சிறிலங்கா அரசாங்கங்களினால் நடத்தப்பட்ட இனக் கலவரங்களுமேயாகும்.

இலங்கையில் ஏற்பட்ட தமிழர் தேசியப்பிரச்சினைக்கு அதாவது அரசியற் பிரச்சினைக்கு பயங்கரவாதப் பிரச்சினை என அரசாங்கம் முலாம் பூச எண்ணியதன் விளைவே அரிதான மூலவளங்களின்வீணடிப்பிற்குமுக்கிய காரணமாகும். அதாவது தமிழர்தேசிய இனப்பிரச்சினையை இராணுவத்தைக் கொண்டு ஒடுக்குவதற்கு பெரியளவில் செலவீடுகளை அரசாங்கம் செய்ய வேண்டி ஏற்பட்டது. இதனால் சகல மூலவளங்களும் இராணுவத்தின் தேவைக்குத் திருப்பப்பட்டன.

அதேவேளை, 'பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழித்தல்' என்ற போர்வையில் இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள் எஞ்சியுள்ள மூலவளங்களையும், பொருளாதார நடவடிக்கைகளையும் அழித்தன. இதனால் நாட்டில் உற்பத்தி குறைந்து பொருளாதாரம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது.

அதேவேளை, இராணுவ நடவடிக்கைகள் வெற்றி அளிக்காத பகுதிகளில் அரசாங்கம் மேற்கொண்ட பொருளாதாரத்தடை நடவடிக்கைகள் மேலும் இலங்கையின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தியது.

இராணுவ நடவடிக்கை போன்றே கடந்த காலத்தில் சிறிலங்கா அரசாங்கம் இனங்களுக்கு இடையில் திட்டமிட்டு ஏற்படுத்திய இனக்கலவரங்களும் பெருமளவில் பொருளாதாரச் சீர்கேட்டிற்கு வழிவகுத்தன. இக் கலவரங்களில் பெருமளவு தமிழரின் பொருளாதாரம் அழிக்கப்பட்டது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில், அரிதான மூலவள அழிவிற்கு 'பயங்கரவாத நடவடிக்கையே' காரணம் என்ற பிரதமர் டி. பி. விஜயதுங்காவின் கூற்றிற்கு சிறுமாற்றம் செய்தாலே அக்கூற்று உண்மை நிலையை உணர்த்தும். அதாவது அரிதான மூலவள அழிவிற்கு 'அரச பயங்கரவாதமே' காரணம் என்பதே இந்த மாற்றமாகும்.

# உதிக்கும் திசைநோக்கி

24

## உன்னத பயணம்....

கரிகாலனுடன் உரையாடிக் கொண்டிருக்கையில் யோகன் வந்தார். மட்டக்களப்புப் பிராந்தியத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவர் இவர். 'பொதுமக்களின் இரண்டு ட்றக்ரர்களுக்கு இராணுவம் சுட்டுவிட்டது என்றார். என்ன நடந்தது? என்று கேட்டேன், 'தமது பொருள்களை எடுத்து வர ஊருக்குள் போனபோது இராணுவம் சுட்டுவிட்டது' என்றார். 'எந்த இடத்தில்' என்று கேட்டேன் 'வந்தாறுமூலை அம்பலத்தடியில்' என்றார். 'பொதுமக்களுக்குஏதாவது...' என்று கேட்டேன் 'அதைப்பற்றி தெரியவில்லை' என்றார்.

மீண்டும் அடுத்த நாள் (03-10-90) அகதிகளைப்பார்க்கப் புறப்பட்டோம் அன்று செல்லும் குழுவுக்கு மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளர் விசு தலைமை தாங்கினார். புறப்படும்போது பொம்மர்கள் வந்தன. எனவே ஒரு இடத்தில் தங்கிவிட்டோம். பொம்மர்களின் சூழப்படி முடிந்தவுடன் மீண்டும் புறப்பட்டோம். வழியில் சந்தித்தவர்களிடம் எங்கே பொம்மர் தாக்கியது என்று விசாரித்தோம். இலுப்படிச்சேனை, களங்காட்டுமுனை ஆகிய பகுதிகளில் தான்தாக்குதல் நடந்ததாகவும் நாலு மாடுகள் இறந்ததாகவும் தெரிவித்தனர். சிவத்தப்பாலம் என்னும் இடத்தை அடைந்தோம். இந்த இடத்திற்குப் பக்கத்தில் 'மீசைக்காரர்' என்று அழைக்கப்படும் ஒருவர் எனக்குப் பரிச்சயமானவர். வயதானாலும் திடகாத்திரமானவர். நான் அடிக்கடி அவரிடம் செல்வதுண்டு. எனவே 'மீசைக்காரரிடம் போய்வருவோம்' என்றேன். 'அவர் இப்போது உயிரோடு இல்லை. இந்திய இராணுவத்தின் காலத்தில் அவரைக் கொன்றுவிட்டார்கள்' என்றார் யோகன். என்ன நடந்தது?' என்றுகேட்டேன். 'இந்திய இராணுவம் பிரதான பாதையை அண்டிய கிராமங்களில் தேடுதல் நடவடிக்கையை தொடங்கிய சமயம் பயத்தினால் ஓடிய மக்கள் இவரது வாடியில் தமது ரி.வி. போன்ற பொருட்களை வைத்துவிட்டு காட்டுக்குள் ஓடினர். இந்திய இராணுவத்தினர் இவரது வாடிக்கு வந்த சமயம் 'எல். ரி. ரியின் ரீவியா' என்று கேட்டனர். இவர் 'இல்லை'யென்றார். இவரை அடிக்க முயன்றனர். 'நீ அடித்தால் நானும் அடிப்பேன்' என்றார். ஒருவன் அடித்தான். அடித்த இராணுவத்தை இடுப்பில் பிடித்து தலைகீழாக குத்தினார் மீசைக்காரர். அவரை அடித்தே கொன்றுவிட்டனர் இந்திய இராணுவத்தினர்' என்றார்.

> அடிக்கமுயன்ற இராணுவத்திடம் ''நீ அடித்தால் நானும் அடிப்பேன்'' என்றார் மீசைக்காரர். ஒருவன் அடித்தான். அடித்த இராணுவத்தை இடுப்பில் பிடித்து தலைகீழாக குத்தினார் மீசைக்காரர். அவரை அடித்தே கொன்று விட்டனர் இந்திய இராணுவத்தினர்.

இதைப்போல எத்தனை விடயங்கள் தான் வெளியுலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. மீசைக்காரரின் வாடியைப் பார்த்தேன். சூழ்நிலை அமைதியாக இருந்தது. அந்த கம்பீரமான குரலை இனிக் கேட்க முடியாது என்ற கசப்பான உண்மையை ஜீரணித்துக்கொள்ளவேண்டி இருந்தது. அவரது அன்புக்கு பாத்திரமான மாடுகள் நிமிர்ந்து பார்த்தன. பொங்கி வந்த கண்ணீரைத் துடைத்தபடி புறப்பட்டேன்.

போகும்போது விசுவிடம் ''மட்டக்களப்பு அகதிகளின் உணவு நிலைமை என்ன மாதிரி?'' என்று கேட்டேன். ''கொஞ்ச நாட்களுக்கு சமாளிப்பார்கள். அதன் பிறகுதான் பெரும் உணவுப் பஞ்சம் வரவிருக்கிறது'' என்றார். ''அந்த கொஞ்ச நாட்களும் எப்படிச் சமாளிப்பார்கள்'' என்று கேட்டேன். ''அறுவடை செய்த வயல்களில் கதிர் பொறுக்குகிறார்கள், அறுவடை செய்யப்பயந்து வெட்டப்படாமலிருக்கும் வயல்களில் யானைகள்மிதித்து சேதம் பண்ணியிருக்கின்றன. அந்த வயல்களிலும் போய் நெற்கதிர்களை அறுத்துக் கொண்டு வருகிறார்கள். அதன் பிறகுதான் சிரமம். பெரும் உணவுப் பஞ்சத்தை எதிர் நோக்க வேண்டியிருக்கும்'' என்றார். நிவாரண உதவிகள் எனனமாதிரி? என்று கேட்டேன். ''தற்போதுதான ஆரம்பித்திருக்கிறார்கள் அதிலும்கூட முஸ்லிம்களின் அதிகாரம் தான் கொடிகட்டிப் பறக்கிறது'' என்றார்.

> அறுவடை செய்த வயல்களில் கதிர் பொறுக்குகிறார்கள. பயத்தினால் அறுவடை செய்யப்படாமல் இருக்கும் வயல்களில் யானை மிதித்து, அழித்து எஞ்சியிருக்கும் நெற்கதிர்களை அறுத்துக் கொண்டு வருகிறார்கள். கொஞ்சநாளுக்கு இப்படி தாக்குப் பிடிப்பார்கள். பின்னர் கடும் உணவுப்பஞ்சத்தை எதிர் நோக்கப் போகிறார்கள்.

''ஏன் அரசாங்க அதிபர் தமிழர் தானே? ஏன் அவரால் இயன்றளவு செய்யமுடியாதா?'' என்று கேட்டேன் அரச அதிபர் தமிழர்தான். ஆனால் அவர் ஒரு பொம்மை மாதிரி இருக்கவேண்டியது தான். நடைமுறையில் அதிகாரம்அவரிடம் இல்லை. ஒரு முஸ்லிம் உதவி அரசாங்க அதிபரிடம் தான்'' என்றார். அதனால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன என்று கேட்டேன். நிவாரணத்துக்கென வாங்கும் அரிசியை காத்தான்குடியிலுள்ள தனது மைத்துனரின் அரிசிஆலையில் மட்டுமே கொள்வனவு செய்ய வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது'' அவரது மில்லில் ஒரு மூட்டைக்கு ஆறு கிலோ அரிசி குறைவு இதை யார் எதிர்த்துக் கேட்கமுடியும். நிறுத்துத் தரும்படி கேட்க கூட்டுறவாளர்களுக்கு பயம், மூட்டைக்கு ஆறு கிலோ என்றால் அதை எப்படி; எந்தக் கணக்கில் பகிர்ந்தளிப்பது என்று கூட்டுறவுச் சங்கங்களும் கிராம சேவையாளர்களும் திணறுகின்றனர். இதே நிலைமை கூட சில நாட்களாகத்தான். அதற்கு முதல் எந்த உதவிகளும் இல்லை என்றார்.

> தமிழரான மட்டக்களப்பு அரச அதிபர் ஒரு பொம்மைமாதிரி. நடைமுறையில் அதிகாரம் ஒரு முஸ்லிம் உதவி அரசாங்க அதிபரிடம் தான்.

உலகத்தை ஏமாற்ற நிவாரணம் கொடுக்கிறோம் என்று அரசு ஏமாற்ற முயற்சிக்கிறது. அந்த நிவாரணத்தில் கூட மூட்டைக்கு ஆறுகிலோ முஸ்லிம்களின் அதிகாரத்துக்குப் போகவேண்டிய நிலை நிலவுகிறது.

''முஸ்லிம்களின் நிவாரணம் என்னமாதிரி'' என்றுகேட்டேன். அவர்களுக்கு ஏதும் சிக்கல் இருப்பதாக தெரியவில்லை. அரசு இவர்கள் விடயத்தில் விசேட அக்கறை எடுக்கிறது. சண்டை தொடங்கியதும் நகரத்தில் இருந்த முஸ்லிம் வீடுகளுக்கு இராணுவம் சென்று உங்களை நாங்கள் பத்திரமாக அனுப்பி வைக்கிறோம் என்று கூறி வெபர் அரங்குக்கும் அருகிலுள்ள பள்ளிவாசல்களுக்கும் கொண்டு வரப்பட்டனர். பின்னர் அவர்களை பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு அனுப்பி முஸ்லிம்கள் அகதிகளாகின்றனர் என்று உலகிற்குபிரச்சாரப்படுத்தி தனது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றப் பார்க்கிறது என்றார். ''அரசியல் நோக்கங்களென்றால்... என்றேன். ''இங்கேமுஸ்லிம்கள் அகதிகளாகின்றனர் என்று முஸ்லிம் நாடுகளுக்கு பிரச்சாரப் படுத்தித்தான் உதவிகள் பெற முனைகிறது ஸ்ரீலங்கா அரசு'' என்றார்.

தொடர்ந்து ''முஸ்லிம்களோ இராணுவமோ இப்படித்தான் செய்வார்கள் என்று தெரியும், ஆனால் ரெலோவினர் செய்வதை நீங்கள் கேட்டால்''... என்றார் ''சொல்லுங்கள்'' என்றேன்.

(தொடரும்)

## உன்னதமான ஆத்மாக்கள்

மாவீரர்களே!
விடியலைத் துரத்திப் பிடிக்க
உங்கள் கால்களை
ஆழப் பதித்து
முன் வைத்ததினால்
தியாகத்தின் வரலாற்றுக் கைகள்
உங்களை கரம் பிடித்தன
விடுதலைக்கு வித்திட்டு

விழித்தபடி தூங்கும்
உங்களது ஆத்மாக்கள்
உன்னத வாய்ப்பு பெற்றவைதான்

- டானியல் சவுந்திரன்

# போர்க்காலச் சூழ்நிலைக்கு ஏற்ப
# வீதி ஒழுங்குக்கு ஒத்துழைக்கவும்

## — விடுதலைப்புலிகள் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதல்களில் காயமடைந்த போராளிகளை விரைவான வாகனப் பயணங்களின் மூலம் நாம் பாதுகாக்க முயலும்போது பல இடையூறுகள் ஏற்படுவதோடு விபத்துகளையும் அதனால் வீண் இழப்புகளையும் சந்திக்க வேண்டி உள்ளது. எனவே பிரதான வீதிகளில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறு செய்யாது ஒத்துழைக்க வேண்டுமென யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கடுமையான போர்ச்சூழல் நிலவுகின்ற இந்த நேரத்தில் பலாலி இராணுவ முகாமைச் சுற்றிப் பாரியளவில் யுத்தங்களில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். வான் தாக்குதல், பீரங்கிக் கப்பற் தாக்குதல் போன்றவற்றிற்கு மத்தியில் படையினரை முகாம்களுக்குள்ளேயே முடக்கி வைக்கப் போராடுகிறோம்.

இம்மோதல்களில் காயமடையும் எமது போராளிகளை வான் தாக்குதல்களுக்கு மத்தியில்தான் ஏற்றிவர வேண்டி உள்ளது. இந்த விரைவான வாகனப் பயணத்திற்கு வீதி இடைஞ்சல்கள் முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

மக்கள் பாதையோரங்களில் கூட்டங்கூட்டமாக நிற்பதனாலும், பாதையின் குறுக்கே வரிசையாக சைக்கிள்களை ஓட்டிச் செல்வதனாலும் வீதியில் சிரித்துக் கதைத்தபடி அவதானமில்லாது செல்வதனாலும், பிரதான சந்திகள், சந்தைகள் ஆகிய இடங்களில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக நிற்பதனாலும் சைக்கிள்களை நிறுத்தி வைத்திருப்பதனாலும் எமது விரைவான வாகனப் பயணம் இடையூறுகளை எதிர் நோக்குகின்றது. சில வேளைகளில் விபத்துக்கள் ஏற்பட்டு இழப்புகளையும் சந்திக்க வேண்டியுள்ளது. பலாலி முகாமை இணைக்கும் குறிப்பாக யாழ். பலாலி பிரதான வீதியூடாகவும், யாழ். காங்கேசன்துறை பிரதான வீதியூடாகவும் விரைவான பயணத்தை நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இவ்விரு பிரதான வீதிகளிலும் பிரயாணம்செய்பவர்களும், வியாபாரம் செய்பவர்களும் தயவு செய்து தற்போதைய போர்க்காலச் சூழலைப் புரிந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (மு)

# கடன் மீளளிப்பிற்கு தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்

### யா - மானிப்பாய்

| தொடர்பு இல. | கடன்பத்திர இல. |
|---|---|
| 1. யா-மா-32 | 132 |
| 2. யா-மா-36 | 136 |
| 3. யா-மா-39 | 139 |
| 4. யா-மா-40 | 140 |
| 5. யா-மா-145 | 245 |
| 6. யா-மா-164 | 264 |
| 7. யா-மா-244 | 344 |
| 8. யா-மா-275 | 375 |
| 9. யா-மா-373 | 473 |
| 10. யா-மா-392 | 492 |
| 11. யா-மா 480 | 580 |
| 12. யா-மா-623 | 723 |
| 13. யா-மா-652 | 752 |
| 14. யா-மா-812 | 912 |
| 15. யா-மா-816 | 916 |
| 16. யா-மா-906 | 1006 |
| 17. யா-மா-1126 | 6126 |
| 18. யா-மா-2069 | 7069 |
| 19. யா-மா-2309 | 7309 |
| 20. யா-மா-2650 | 7650 |
| 21. யா-மா-3162 | 18,662 |

### யா - கோப்பாய்

| தொடர்பு இல. | கடன்பத்திர இல. |
|---|---|
| 1. யா-கோ-17 | 17 |
| 2. யா-கோ-41 | 41 |
| 3. யா-கோ-65 | 65 |
| 4. யா-கோ-114 | 1114 |
| 5. யா-கோ-129 | 1129 |
| 6. யா-கோ-178 | 1178 |
| 7. யா-கோ-255 | 1255 |
| 8. யா-கோ-397 | 1397 |
| 9. யா-கோ-455 | 1455 |
| 10. யா-கோ-471 | 1471 |
| 11. யா-கோ-577 | 1578 |
| 12. யா-கோ-583 | 1584 |
| 13. யா-கோ-647 | 1648 |
| 14. யா-கோ-1525 | 8526 |
| 15. யா-கோ-1533 | 8534 |
| 16. யா-கோ-2039 | 9040 |
| 17. யா-கோ-2361 | 9362 |
| 18. யா-கோ-2459 | 9460 |
| 19. யா-கோ-2946 | 9947 |
| 20. யா-கோ-3142 | 14,143 |
| 21. யா-கோ-3605 | 14,606 |
| 22. யா-கோ-3614 | 14,615 |
| 23. யா-கோ-3741 | 14,742 |
| 24. யா-கோ-4131 | 15,132 |
| 25. யா-கோ-4211 | 15,212 |
| 26. யா-கோ-4583 | 15,584 |
| 27. யா-கோ-6287 | 18,288 |
| 28. யா-கோ-6295 | 18,296 |

### யா - பருத்தித்துறை

| தொடர்பு இல. | கடன்பத்திர இல. |
|---|---|
| 1. யா-பரு-01 | 20,001 |
| 2. யா-பரு-21 | 20,013 |
| 3. யா-பரு-53 | 20,045 |
| 4. யா-பரு-71 | 20,071 |
| 5. யா-பரு-115 | 20,116 |
| 6. யா-பரு-181 | 20 181 |
| 7. யா-பரு-230 | 20,230 |
| 8. யா-பரு-284 | 20,284 |
| 9. யா-பரு-301 | 20,301 |
| 10. யா-பரு-362 | 20,362 |
| 11 யா-பரு-442 | 20,442 |
| 12 யா-பரு-542 | 20,542 |
| 13 யா-பரு-816 | 20,816 |
| 14. யா-பரு-1156 | 21,156 |

### யா - நல்லூர்

| தொடர்பு இல. | கடன்பத்திர இல. |
|---|---|
| 1. யா-ந-253 | 3,253 |
| 2. யா-ந:374 | 3 374 |
| 3. யா-ந-403 | 3,402 |
| 4. யா-ந-405 | 3,405 |
| 5. யா-ந-525 | 3,525 |
| 6. யா-ந-643 | 3,643 |
| 7. யா-ந-1281 | 10,281 |
| 8. யா-ந-1536 | 10,536 |
| 9. யா-ந-1577 | 10,577 |
| 10. யா-ந-2358 | 11,358 |
| 11. யா-ந-2603 | 11,603 |
| 12 யா-ந-3164 | 12,164 |
| 13. யா-ந-3253 | 12,253 |
| 14. யா-ந-3401 | 12,401 |
| 15. யா-ந-3470 | 12,470 |
| 16. யா-ந-3545 | 12,545 |
| 17 யா-ந-3622 | 12,622 |
| 18. யா-ந-3653 | 12,653 |
| 19. யா-ந-3814 | 12,814 |
| 20. யா-ந-3852 | 12 852 |
| 21. யா-ந-4028 | 13,028 |
| 22. யா-ந-4286 | 13,286 |

### யா - உடுவில்

| தொடர்பு இல. | கடன்பத்திர இல |
|---|---|
| 1. யா-உ-89 | 2,090 |
| 2. யா-உ-125 | 2,126 |
| 3. யா-உ-210 | 2,211 |
| 4. யா-உ-239 | 2,240 |
| 5. யா-உ-298 | 2,299 |
| 6. யா-உ-312 | 2,313 |
| 7. யா-உ-435 | 2,436 |
| 8. யா-உ-759 | 2,760 |
| 9. யா-உ-926 | 2,927 |
| 10. யா-உ-940 | 2,941 |
| 11. யா-உ-986 | 2,987 |
| 12 யா-உ-1723 | 4,724 |
| 13. யா-உ-1940 | 4,941 |
| 14. யா-உ-1994 | 4,995 |
| 15 யா-உ-2104 | 5,105 |

### பாதுகாப்பு

வொரு மூலையிலும் அலாம கப்பட உள்ளது என மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அதிகாரி கூறுகையில் வடபகுதிக்கு இப்போதைக்கு மின்சாரம் கிடைக்காது போயினும் இந்த விளக்குகளுக்கு விஷேடமாக மின் வழங்கப்பட்டு விளக்குகள் எரிக்கப்படும் என்றும் கூறினார்.

யாழ். மாவட்டத்துக்கு மின்சாரம் மீண்டும் கிடைக்கும் சாத்தியக்கூறுகள் பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கும்போது இணைப்புகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டாலும் தொடர்ச்சியாக மின்வழங்க முடியாத நிலை இருந்து வரும். சுழற்சி முறையிலேயே மின் வழங்கக் கூடியதாக இருக்கும் என்றும் கூறினார். (லோ)

### மாங்குளம்

கின்றன. இந்த குண்டுவீச்சில் முறிகண்டி ஆலயப் பகுதியில் உள்ள கடை கட்டடங்களும், மாங்குளம் இராணுவ முகாம் சுற்றாடலும் அழிவுகளுக்குள்ளாயின.

ஹெலிகொப்ரர்கள் இரண்டு மாறி மாறி வட்டமிட்டு துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்த வண்ணம் இருந்ததாகவும் அந்தச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (லோ)

### திருக்கோணமலை

ணுவத்தினர் கொல்லப்பட்டனர். என்றும் மூன்று இராணுவத்தினர் காயமடைந்தனர் என்றும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

### மன்னாரில்

கார்த்த தீபச்சுடர்கள் மன்னார் மாவட்ட இராணுவத் தளபதியால் ஏற்றப்படவுள்ளன. மாவீரர் ஞாபகார்த்த தென்னந்தோப்பு ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. மன்னார்ப் பிராந்தியத்தில் வீரமரணம் எய்திய 190 க்கும் மேற்பட்ட மாவீரர்களது பெற்றோர், உறவினர்கள் தென்னம்பிள்ளைகளை நாட்டி வைப்பர்.

மாவீரரின் பெற்றோர், உறவினர் தங்குவதற்கு வதிவிடங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### வேங்கைகளின்

கள், பிரதேசச் செயலகங்கள், மாவட்டச் செயலகம் ஈழநாதம் செயலகம், மாவீரர் செயலகம் மற்றும் யாழ்ப்பாணம் நியூ விக்ரேஸ் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும், இதன் விலை 60 ரூபா என்றும் விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

# தமிழ்நாட்டில் புலிகளுக்கு தொழிற்சாலை எதுவும் இல்லை

## -கருணாநிதி

(சென்னை)

தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எந்தவொரு ஆயுத தொழிற்சாலையோ, துணிஆலையோ இல்லை என தமிழக முதலமைச்சர் மு கருணாநிதி அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய மு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார். மண்டல் கமிஷன் அறிக்கையை தமிழ்நாட்டில் அமுல்படுத்துவது தொடர்பான குமுறலில் சில அரசியல் கட்சிகள் இவ்வாறு குற்றஞ் சாட்டுகின்றன என்று அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாட்டுத் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி தமிழகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துணித்தொழிற்சாலையும், ஆயுத தொழிற்சாலையும் இருப்பதாகவும், இதற்கு தமிழக முதல்வர் மு. கருணாநிதி துணை போகின்றார் என்றும் குற்றஞ் சாட்டியிருந்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவிக்கும் முகமாக நேற்று முன்தினம் சென்னையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின் முடிவிலே செய்தியாளர்களிடம் பேசிய கருணாநிதி புலிகளின் ஆயுத தொழிற்சாலையோ, துணி தொழிற்சாலையோ இல்லை எனத் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ்நாட்டில் அவர்களால் சட்டம், ஒழுங்கு முறைகள் பாதிக்கப்படவில்லை என்றும், இந்திய இராணுவத் தலைவர்களையே மற்றைய அரசியல் தலைவர்கள் புலிகளின் இராணுவத் தலைவர்கள் எனக் கூறுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

அடுத்து இந்தியாவில் இருந்து பெற்றோல், டீசல் போன்ற எரிபொருள்கள் கடத்தப்படுவது குறித்தும் அவர் மறுப்புத் தெரிவித்தார்.

### இன்று

லும், சிட்டிவிளக்குகளாலும், தீப்பந்தங்களாலும் சுடரேற்றி தியாகதீபங்களான மாவீரரை நினைவுகொள்ளும்படி தமிழீழ விடுதலைப்புலிகள் தலைமைச் செயலகம் கேட்டுக்கொள்கின்றது.

# "றோ" மீதான கருணாநிதியின் குற்றச்சாட்டு அர்த்தமற்றது

## -பொன். விஜயராகவன்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் நடமாட்டம் குறித்தும், அவர்களின் நடவடிக்கைகள் குறித்தும் மாநில அரசு வெள்ளையறிக்கை வெளியிடவேண்டும் எனப் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அத்வானி தெரிவித்தார்.

இதேசமயம் நேற்று செய்தியாளர் மத்தியில் சட்டமன்ற உறுப்பினர் பொன். விஜயராகவன் பேசும்போது அண்மையில் பல இடங்களில் தனித் தமிழ்நாடு கோஷங்கள் எழுப்பப்பட்டதையும், விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாடு அரசு துணைபோவதையும் கருத்திற்கொண்டால் ஏதோஒரு ஆழ்ந்த பின்னணி இருக்கலாம் எனத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து தமிழ்நாடு அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், நாட்டின் பாதுகாப்பிற்காக சில தகவல்களைச் சேகரித்த அரசியல் கலப்படமற்ற றோ அமைப்பு மீது அனாவசியமாகத்தமிழக முதல்வர் வீண் பழி சுமத்துவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் முதலமைச்சர் கருணாநிதி இலங்கைத் தமிழர் அனைவரையும் ஒன்று சேர்ப்பதை விட்டுவிட்டு போராளிகள் அமைப்பொன்றுடன் சேர்ந்து கொண்டு ஏனைய அமைப்புகளை எள்ளி நகையாடுவதையும் அவர் சுட்டிக்காட்டினார். (மு)

### தப்பி ஓடிய

தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்பதும் அவைபற்றி சரியான தகவல் தெரியவில்லை என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி செய்தி வெளியிடுகையில் மாங்குளம் இராணுவ முகாமில் இருந்த முன்னூறுக்கும் மேற்பட்ட இராணுவத்தினருக்கும் என்ன கதி ஏற்பட்டது எனத் தெரியாது எனக் குறிப்பிட்டது.

# சிறிலங்கா அரசாங்கம் போராட்டத்தை அடக்க எடுத்த முயற்சிகள் போராட்டத்தை வளர்த்தன

## - ஆஞ்சநேயர்

(அரியாலை)

சிங்கள இனவெறி அரசாங்கம் எமது போராட்டத்தை அடக்க எடுத்தமுயற்சிகள் யாவும் எமதுபோராட்டத்தை வளர்த்ததேதவிர பலவீனப்படுத்தவில்லை என நேற்று முன்தினம் அரியாலை தபாற் கட்டைச் சந்தியில் இடம் பெற்ற மாவீரர்தின விழாவில் உரையாற்றிய யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை 2500 போராளிகளவரைவீரமரணம் அடைந்துள்ளார்கள். இவர்கள் சிந்திய இரத்தத்தாலேயே இந்தப் புலிக்கொடி பறக்கிறது என்றும் திரு ஆஞ்சநேயர்தெரிவித்தார்.

எமது சுதந்திரக்கொடி, மொழிவளத்தை மறந்து நாம் அகதிகள் ஆனோம். ஆனால் இன்று எமக்குத் தேசியக் கொடி உண்டு. தேசியகீதம் உண்டு. தேசியநாளும் கொண்டாடுகின்றோம் எனத்தெரிவித்தார்.

அத்துடன் அரியாலையிலும் அதன் அயற்கிராமங்களிலும் மறைந்த போராளிகளின் நினைவாக அறுபது தீபங்கள் மறைந்த போராளிகளின்பெற்றோர் மற்றும் உறவினர்களால் ஏற்றப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரியாலைப்பிரதேசப்பொறுப்பாளர் பகீன், விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி உறுப்பினர் சித்திரா, விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத் தலைவர் அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இத்துடன் மாணவர்இயக்கத்தினரின்வில்லுப்பாட்டும் நடைபெற்றது.

### தமிழ்நாட்டில்

முன்தினம் செய்தியாளர்களிடையே பேசிய இவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளத்தில் 600 வீடுகளும், அழியா நிலையில் 300 வீடுகளும், தேக்காட்டூரில் 400 வீடுகளும் கட்டப்படுகின்றன என்று கூறினார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.